**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.12/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.221/2016**

1. குருசாமி கோனார் (இறப்பு)
2. முருகேஸ்வரி
3. ராமலட்சுமி
4. மாரியம்மாள்
5. பூமாரியம்மாள்
6. பேச்சியம்மாள் ....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. உடையம்மாள்
2. வெயிலுகந்தாள்
3. காளீஸ்வரி ....எதிர்மனுதார்கள்/வாதிகள்

இம்மனுவானது 21.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், Allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.03 17:38:13 +0530

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவர் இறந்துவிடவே, மேற்படியாரின் குமாரரான கணசேன் என்பவரை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரித்துக் கொள்ள அனுமதி வழங்கியும், மேற்படியாருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பிடவும் உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், இவ்வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பிராது தபசில் சொத்துக்கள் தங்களுக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக்கோரியும் அதனைத் தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் இவ்வழக்கின் பிராது தபசில் சொத்துக்கள் தனது தாயார் பேச்சியம்மாள் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், மேலும் மேற்படி உயில் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சிகளாக முத்தையாக்கோனார், லட்சுமணக்கோனார், ஆறுமுக ரெட்டியார் ஆகியோர்கள் கையொப்பமிட்டிருந்த நிலையில், மேற்படியார்கள் மூவருக்கும் மேற்படி உயில் ஆவணம் பற்றி சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றம் மூலம் சாட்சி சமன் செய்திருந்த நிலையில், மேற்படியார்கள் மூவரும் இறந்துவிட்டதாக கூறி மேற்படி சாட்சி சம்மன் திருப்பப்பட்டது என்றும், ஆகவே மேற்படி உயில் ஆவணத்தில் 1வது சாட்சியான முத்தையாக்கோனார் என்பவர் இறந்துவிட்ட நிலையில், மேற்படியாரின் மகன் வேல்ச்சாமி என்பவரை மேற்படி உயில் பற்றி சாட்சியம் அளிக்க சமன் செய்திருந்த நிலையில், மேற்படியாரை எதிர்மனுதாரர்கள் மிரட்டி இந்நீதிமன்றத்தில் ஆஜராகவிடாமல் செய்து விட்டார்கள் என்றும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.03 17:38:21 +0530

இந்நிலையில், மேற்படி உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவரை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் மேற்படி குருசாமி என்பவரும் இறந்துபோய்விட்டார் என்றும், இந்நிலையில் மேற்படி உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவரின் மகனான கணசேன் என்பவரை மேற்படி உயில் ஆவணம் பற்றி விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பு கட்சியையும், எதிர்மனுதாரர்களின் மோசடி செய்கைகளையும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபட நிரூபணம் செய்யமுடியும் என்றும், மேலும் இந்நீதிமன்றமும் இவ்வழக்கில் ஒரு இறுதியான தீர்முடிவும் காண இயலும் என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், ஆகையால், பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவர் இறந்துவிடவே, மேற்படியாரின் குமாரரான கணசேன் என்பவரை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரித்துக் கொள்ள அனுமதி வழங்கியும், மேற்படியாருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பிடவும் உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் Allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனுவானது பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவர் இறந்துவிடவே, மேற்படியாரின் குமாரரான "தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.03 17:38:28 +0530

கரிவலம்வந்தநல்லூர் கிராமம், பம்புத் தெருவில் குடியிருக்கும் லேட்.குருசாமி அவர்கள் குமாரர் கணசேன்" என்பவரை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரித்துக் கொள்ள அனுமதி வழங்கியும், மேற்படியாருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பிடவும் உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர்களால் இம்மனுவில் அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சாட்சியாக பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவரை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் மேற்படி குருசாமி என்பவரும் இறந்துபோய்விட்டார் என்றும், இந்நிலையில் மேற்படி உயில் ஆவணத்தை எழுதிய குருசாமி என்பவரின் மகனான கணசேன் என்பவரை மேற்படி உயில் ஆவணம் பற்றி விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பு கட்சியையும், எதிர்மனுதாரர்களின் மோசடி செய்கைகளையும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபட நிரூபணம் செய்யமுடியும் என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களால் இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றமானது விசாரணை நீதிமன்றமாக உள்ள நிலையில், மனுதாரர்கள் தனது வழக்கை நிரூபிக்க போதுமான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதி என்பதாலும்,

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.03 17:38:35 +0530

மேலும் இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் Allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**10) இறுதியாக**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.03 17:38:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.03 17:38:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.12/2026
in
O.S.No.221/2016

**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 03.02.2026**